**செ.வெ. எண்: 072** **நாள்:07.02.2017**

# தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

## தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் இ–சேவை மையங்களில் ஆதார் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை திருத்தம் செய்யும் வசதி 10.02.2017 முதல் வழங்கப்படவுள்ளது

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தமிழகம் முழுவதும் அரசு இ–சேவை மையங்களை அமைத்து நிர்வகித்து வருகிறது. தலைமைச் செயலகம், அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், பெருநகர சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகம் (ரிப்பன் மாளிகை), பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலகங்கள் ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் இ–சேவை மையங்களில், ஏற்கனவே ஆதார் எண் பெற்றுள்ளவர்கள் தங்களது ஆதார் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை திருத்தம் செய்யும் வசதி 10.02.2017 முதல் வழங்கப்படவுள்ளது. எனவே, பொதுமக்கள் மேற்கண்ட மையங்களுக்கு **நேரில் சென்று,** தங்களது ஆதார் எண்ணைத் தெரிவித்து கைரேகை அல்லது கருவிழியினைப் பதிவு செய்து தங்களது **பெயர், பிறந்த தேதி, பாலினம், முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி** மற்றும் **புகைப்படம்** ஆகிய விவரங்களை மாற்றிக் கொள்ளலாம். இதற்கு சேவை கட்டணமாக ரூபாய் இருபத்தைந்து மட்டும் வசூலிக்கப்படும்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**